2023 அக்டோபர் 11][திரு. ஆர். வைத்திலிங்கம்]

செய்துகொண்டிருக்கிறது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சொல்லாததையும் செய்யக்கூடியவர் என்று இந்த அவையில் கூறினார்கள். சொன்னதை நீங்கள் ஏன் செய்யவில்லை? மேதகு Governor-ஐ சென்று அப்போது சந்தித்தீர்கள். 'கொடநாடு குற்றவாளிகளை கண்டுபிடியுங்கள்' என்று அவர்களிடம் கூறினீர்கள். இன்றைக்கு அந்த இடத்திலிருக்கின்ற நீங்கள் தயவுசெய்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, உண்மைக் குற்றவாளி எத்தகைய உயரமான இடத்திலிருந்தாலும், எங்கள் அம்மா அவர்களின் வீட்டில் நடந்த கொலையில் சம்பந்தப்பட்டவர்களை சொந்தக்காரர்களை கண்டுபிடித்துக் கூண்டில் ஏற்றுங்கள், ஏற்றுங்கள் என்று கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள், கொடநாடு பிரச்சினையைப் பற்றி இங்கே பேசியிருக்கிறார். தற்போது அது சி.பி.சி.ஐ.டி. விசாரணையில் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த சி.பி.சி.ஐ.டி. விசாரணையே நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் நடைபெறத் தொடங்கியிருக்கிறது. சிறப்புப் புலனாய்வுத் துறையின்மூலம் இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விசாரணையின் முன்னேற்றம் மற்றும் தற்போது இருக்கக்கூடிய நிலவரங்களைப் பற்றியெல்லாம் தொடர்புடைய அறிக்கை விரைவிலே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கிறது. எனவே, இந்த வழக்கிலே யார், யார் தவறு செய்திருக்கிறார்கள் என்பது மிக விரைவிலே வெளியே வரப் போகிறது. அவர்கள் எப்படிப்பட்ட இடத்திலே இருந்தாலும், நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

(ஈ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசிய பிறகு வாய்ப்பு தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறேன், நான் சொல்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்துப் பேசுவதற்கு என்னிடத்தில் எழுதிக்கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் பேசிய பிறகு தானே உங்களுக்கு வாய்ப்பு தர முடியும்? மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் விதி 55-ன்கீழ் பேசுவதற்கு எழுதிக்கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்று சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்து, அது தற்போது மேதகு Governor இடம்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டத்திற்குட்பட்டு Justice Authinathan Commission, நீதியரசர் அவர்களின் தலைமையில் கமிஷன் அமைக்கப்பட்டு, அதில் 6 நபர்களை நியமித்து, அதுதான் மேதகு ஆளுநர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதே தவிர, அதை குற்றம் என்று சொல்வதற்கோ அல்லது ** என்று வருவதாக இருந்தால் அதை அரசு பார்த்துக்கொள்ளும். அதனை நான் பதிவு செய்துவிட்டேன். போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு).

(உ) ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் அணிவகுப்பு நடத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்களும் அறிவித்துள்ள நல்ல அறிவிப்புகளை செவிலியர்களின் காதுகளில் தேன் வந்து பாய்கின்ற அறிவிப்புகளான அவர்களின் சம வேலைக்கு சம ஊதியம், பணி நிரந்தரம் ஆகிய இந்த அறிவிப்புகளை வரவேற்று. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது